பக்கங்கள் 17+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 16 செவ்வாய்க்கிழமை 12.11.2024 | அதிர்வு 103

## வாக்கு உங்கள் உரிமை! கட்டாயம் பயன்படுத்துக!!

### தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை



“வாக்கு உங்கள் உரிமை, நவம்பர் 14 ஆம் திகதி அதனைக் கட்டாயம் பயன்படுத்துங்கள்.”

02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழர்களுக்கு தீர்வு தர அநுர தயாரில்லை!

### யாழில் சுமந்திரன் சாட்டையடி

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

“மாற்றம் மாற்றம் என்று மாறி மாறி வலியுறுத்தும் ஜனாதிபதி அநுர, தமிழர்களுக்கு தேசிய இனப் பிரச்சினையைக் கொஞ்சமும் கணக்கில் எடுக்கவில்லை. இதுதான் உண்மை.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நேற்று திங்கட்கிழமை இரவு நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் இறுதிக் கட்டத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

02 ▶



### இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய

# இந்திய மீனவர்கள் 11 பேருக்கு 2 வருடங்கள் சிறைத்தண்டனை



(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான இந்திய மீனவர்கள் 11 பேருக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் 2 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய வேளை கடந்த ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 15 இந்திய மீனவர்களில் 11 பேருக்கே 2 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஏற்கனவே எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டபோதும் 10 மீனவர்கள் இரண்டாவது தடவையும் எல்லை தாண்டிய குற்றத்துக்காகவும், படகு உரிமையாளர் ஒருவருமாகவே 11 பேருக்கும் 2 வருடங்கள் சிறைத்தண்டனை

02 ▶

# சுற்றுலா வந்த தென்னிலங்கை பெண் யாழ்ப்பாணத்தில் விபத்தில் சிக்கி பலி

தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா வந்த பெண்ணொருவர் விபத்தில் சிக்கி படுகாயமடைந்திருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கம்பஹாவைச் சேர்ந்த டோனி ப்ரெயன் பெரேரா ரணசிங்க வீரக்கொடி புஸ்பராணி என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கடந்த 9ஆம் திகதி சுற்றுலாவுக்காக யாழ்ப்பாணம் வந்துள்ளனர். மறுநாள் அவர்கள் காங்கேசன்துறை நோக்கி தமது காரில் பயணித்துக்கொண்டிருந்த வேளை காரும் பட்டா ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

அதில் படுகாயமடைந்த பெண்ணை மீட்டு தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு மேற்படி பெண் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று திங்கட்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாய் - கைதடி வீதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்தவரே உயிரிழந்துள்ளார்.

வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளை முந்தி செல்ல முற்பட்ட வேளை, மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### தமிழர்களுக்கு...

அவர் மேலும் உரையாற்றுகையில், "ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தனக்கு ஆதரவு கோரி ஜனாதிபதி அநுர எம்முடன் பேச்சு நடத்தியிருந்த போது, தெற்கில் மாற்றம் வரவுள்ளது. இரண்டரை வருடங்களாக மக்கள் இந்த மாற்றத்துக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். அதில் நீங்கள் பங்காளிகளாக இருக்கப்போவதில்லையா? என்று எம்மிடம் வினவியிருந்தார். அதற்கு தெற்கில் வரவுள்ள மாற்றங்கள் நல்லவை என்றும், கேடான அரசியல் கலாசாரம், ஊழல் மோசடிகளுக்கு எதிரான நடவடிக்கை என அனைத்துக்கும் எதிராக நாம் இணைந்து செயற்படுவோம் என்று அவரிடம் தெரிவித்திருந்தேன்.

ஜனாதிபதி அநுர யாழ்ப்பாணத்தில் நேற்று (நேற்றுமுன்தினம்) பரப்புரைக்காக வருகின்றார் என்றபோது, நான் அவரிடம் இரண்டரை வருடங்களாக தெற்கில் இருந்த மாற்றத்துக்கான காத்திருப்பில் பங்காளியாக வேண்டும் என்று எம்மிடக் கோரியிருந்தீர்கள். ஆனால், எழுபத்தைந்து ஆண்டுகளாக எங்கள் மக்கள் மாற்றத்துக்காக ஏங்குகின்றனர். இந்த மாற்றத்துக்கான ஏக்கத்தில் நீங்கள் பங்காளியாக இருப்பீர்களா? இல்லையா? இதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று அவரிடம் தெரிவித்திருந்தேன். ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் உரையாற்றும்போது இது தொடர்பில் மூச்சுக்கூட விடவில்லை. சமஷ்டி தொடர்பில் கதைப்பதற்கே அவர் தயாரில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டமாக இருக்கலாம், பார் பெமிட்கள் வழங்கப்பட்டவர்களின் விவரங்களை வெளிப்படுத்துவதாக இருக்கலாம் ஆட்சிப்பீடம் ஏறிய வெறும் ஒரு மாதத்துக்குள் தேசிய மக்கள் சக்தியினர் சொல்வது ஒன்றாக, செய்வது வேறொன்றாக இருக்கின்றனர். இது ஆபத்தானது.

நான் தேசிய மக்கள் சக்தியினர் தொடர்பில் இவ்வளவு நேரம் எதற்காகக் கதைக்கின்றேன் என்று உங்களில் பலர் கேட்கலாம். ஏனெனில், யாழ்ப்பாணம் மக்களுக்கு ஒரு கெட்ட பழக்கம் இருக்கின்றது. மத்தியில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வருகின்றதோ அந்தக் கட்சியைச் சேர்ந்தவருக்கு யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் ஓர் ஆசனத்தையேனும் வழங்கிவிடுவார்கள். அது தியாகராஜா மகேஸ்வரனாக இருக்கலாம், விஜயகலா மகேஸ்வரனாக இருக்கலாம், அங்கயன் இராமநாதனாக இருக்கலாம், அல்லது எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் அமைச்சராக இருக்கின்ற டக்ளஸாக இருக்கலாம். இது மிகக் கெட்ட பழக்கம். சிந்திக்காத நடவடிக்கை.

இதேவேளை, தாங்கள்தான் தேசியவாதிகள் என்று தையிட்டியில் விகாரை கட்டி முடியும் வரை காத்திருந்து திறப்பு விழாவின் பின்பு அங்கே குந்தியிருப்போர் தேசியத்தைக் காக்க செயற்படுவதனைவிட நாங்கள் அதிகமாகவே மேற்கொள்கின்றோம். ஆனால், நாங்கள் கூவித் திரிவதில்லை. நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று அவர்கள் தெரிவிக்கின்றபோது அவற்றைக்கூற வேண்டியுள்ளது. உதாரணமாக கடந்த மாவீரர் தினத்துக்கு அண்மையாக கிளிநொச்சியிலே 7 பொலிஸ் நிலைய அதிகாரிகள் மாவீரர் தினத்தைத் தடை செய்யுமாறு மனு தாக்கல் செய்த போது அங்கிருந்த சட்டத்தரணி எனக்குத் தகவல் வழங்கினார். நான் வடமராட்சி கிழக்கில் இருந்து உடன் ஓடிச் சென்று நீதிமன்றத்தில் வாதாடி அந்தத் தடைகோரல் மனுவை உடைத்தேன். அதனால் அந்த மாவீரர் தின நிகழ்வு தடையின்றி இடம்பெற்றது. அது இவர்களால் முடியவில்லை." - என்றார்.

### இந்திய மீனவர்கள்...

விதித்து இன்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய நால்வரும் 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஓராண்டு சிறைத்தண்டனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

### வாக்கு உங்கள்...

- இவ்வாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ. ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், தேர்தலை நீதியாக நடத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன எனவும், பாதுகாப்பு ஏற்பாடுகள்கூட உரிய வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# இலங்கை என்பியில் சங்கத்தின் தலைவராக பதவியேற்றார் வைத்திய நிபுணர் கோபிசங்கர்






(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் தயாசிவம் கோபிசங்கர், இலங்கை என்பியில் சங்கத்தின் 2024 - 2025 ஆம் ஆண்டுக்கான தலைவராகப் பதவியேற்றார்.

கோபிசங்கர் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் பழைய மாணவனும்,யாழ்ப்பாணம்பல்கலைக்கழகமருத்துவ பீடத்தின் பட்டதாரியும் ஆவார்.

யாழ். போதானா வைத்தியசாலையிலிருந்து இவ்வாறான ஒரு சங்கத்துக்கு தலைவராகத் தெரிவு செய்யப்படும் முதலாவது வைத்திய நிபுணர் இவராவார்.

அத்துடன் அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச சத்திர சிகிச்சையாளர் சங்கத்தின் இலங்கைக்கான பிரிவின் முதலாவது தலைவராகவும் கோபிசங்கர் செயற்படுகின்றார்.




# நானாட்டானில் மேய்ச்சல் தரைகள் ஆக்கிரமிப்பு! வடக்கு ஆளுநரிடம் பாதிக்கப்பட்டோர் முறையீடு!!

(பிரபாகரன் டிலக்சன்)

மன்னார் – நானாட்டான் பகுதியில் உள்ள மேய்ச்சல் தரைகள் ஆக்கிரமிக்கப்படுவது தொடர்பாக இன்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் நானாட்டான் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் மகஜர் கையளித்துள்ளனர்.

கடந்த எட்டு வருடங்களுக்கு முன்னர் மன்னார் – நானாட்டான் பகுதியில் கால்நடை வளர்ப்போர்கான மேய்ச்சல் தரைகள் ஒதுக்கப்பட்டுள்ள போதும் அந்த இடங்கள் இன்னும் கையளிக்கப்படாமல் உள்ள நிலையில் இன்று நானாட்டான் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் வடக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

இன்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆளு



நர் செயலகத்தில் வைத்து வடக்கு மாகாண ஆளுநரிடம் தமது மகஜரை அவர்கள் கையளித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் நானாட்டான் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கே.எம்.நிஹால் கருத்துத் தெரிவிக்கையில்,

“2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளை வளர்த்து வருகின்றார்கள். இவற்றுக்குரிய மேய்ச்சல் தரை காணி ஒதுக்கப்பட்டுள்ளபோதும் அவை எங்களிடம் கையளிக்கப்படவில்லை.

மேய்ச்சல் தரைக்கு என ஒதுக்கப்பட்டுள்ள இடங்களைச் சிலர் சட்ட விரோதமாகக் காடழிப்பு செய்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள். இதில் ஒரு சில அரச அதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பதால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

எனவே, இந்தப்பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளோம். ஆளுநர் எதிர்வரும் 21ஆம் திகதி மன்னார் நானாட்டான் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாக எங்களிடம் தெரிவித்தார்.” – என்றார்.

# தேர்தல் கடமைகள் தொடர்பில் யாழில் இன்று கலந்துரையாடல்



**(பிரபாகரன் டிலக்சன்)**

நாளைமறுதினம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கும் யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகருக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இன்று காலை 9:30 மணியளவில் யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகரும் பதில் அரச அதிபருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.





# தோட்டக் கிணற்றில் இருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணத்தில் தோட்டக் கிணற்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஏழாலை தெற்கு, மயிலங்காடு பகுதியைச் சேர்ந்தவரே நேற்று திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை வீட்டில் இருந்து சென்றவர் வீடு திரும்பாத நிலையில் உறவினர்கள் அவரைத் தேடி வந்தனர். இந்நிலையில், அவரது வீட்டுக்குச் சற்றுத் தொலைவில் உள்ள தோட்டக் கிணற்றில் இருந்து அவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# கொழும்பு - ஹட்டன் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயம்!

(மஸ்கெலியா )

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸூம், வானொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில், வானின் சாரதி படு காயமடைந்துள்ளார்.

கொழும்பு– ஹட்டன் பிரதான வீதியில் ஸ்கேடன் தோட்ட பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை (12) பிற்பகல் 2 மணியளவில், இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த சாரதி, வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்கான நாவலப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஹட்டனில் இருந்து கொழும்பு வரையிலும் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸூக்கு எதிர் திசையில், கினிகத்ஹேனவில் இருந்து ஹட்டன் நோக்கி அதிவேகத்தில் பயணித்த வான், முன்பாக பயணித்த ஓட்டோவை, முந்திச் செல்வதற்கு முயன்ற போதே எதிரேவந்த பஸ்ஸூடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பஸ்ஸூக்கும், வானுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது எனத்தெரிவித்த ஹட்டன் போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கணினி விஞ்ஞானத்துறையில் சாதனை!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பிரித்தானியாவில் உள்ள வைஸ்ட்மினிஸ்டர் (ுநளவ ஆைைளவநச) பல்கலைக்கழகத்தில் கணினி விஞ்ஞான கற்கை நெறியில் அப்துல் ஹக்கம் முதல் தரத்தில் முதலிடம் பெற்று சித்தி அடைந்துள்ளார்.

இரண்டு வருடம் முன்னதாகவே தனது க.பொ.த. உயர்தர பரீட்சையை 16 வயதில் சிறந்த பெறுபேறுகளுடன் முடித்த இவர், தனது 21 ஆவது வயதில் பட்டப்படிப்பை முடித்துள்ளார்.

தற்போது ஹக்கம் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவை தளமாகக் கொண்ட செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) தொடர்பான நிறுவனம் ஒன்றில் வேலை பெற்று, அந்தத்துறைசார் பொறியியளாளராகக் கடமை ஏற்றுள்ளார்.

இவர், கல்ஹின்னையைச் சேர்ந்த சிரேஷ்ட பட்டயக் கணக்கறிஞர் எஸ்.ஏ. அஸீஸ் மற்றும் சித்தி பரீதா ஆகியோரின் புதல்வராவார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரசியலும் அரிசியியலும்

நாட்டின் அரசியல் இப்போது அரிசியியலுக்குள் புகுந்திருக்கின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாடு - பற்றாக்குறை - நாளை மறுதினம் நடைபெற உள்ள பொதுத்தேர்தல் வாக்களிப்பில் நேரடியாக தாக்கம் செலுத்தாவிட்டாலும், அதன் பின்னர் நாட்டில் கட்டவிழப் போகின்ற அரசி யலில் அது முக்கிய பங்களிக்கும் என்று எதிர்பார்க்கக்கூடிய சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன.

அரிசி ஆலை உரிமையாளர்கள் அநேகமானோர் திட்டமிட்ட - செயற்கையான முறையிலான - அரிசித் தட்டுப்பாட்டை உருவாக்கியுள்ளமையால் தற்போது சில பிரதேசங்களில் அரிசி விலை உச்சம் தொட்டுள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்தி வருகின்றனர். இது பற்றிய செய் திகள் பல பக்கங்களில் இருந்தும் வெளி யாகி வருகின்றன.

முன்னைய காலங்களில் - அறுபதுகளில், எழுபதுகளில், எண்பதுகளில் - நாட்டின் அரசியல் என்பது அரிசிய லோடும் - முழுமையாகக் கலந்து இருந் ததை நாம் மறந்து விட முடியாது. அரிசி யின் விலையை 25 சதம் உயர்த்தியமை காரணமாக ஓர் அரசு கவிழ வேண்டி வந்தமை கூட மறக்கக் கூடியதல்ல. ஆயினும் தற்போதைய இலங்கை அரசியலில் அரிசிப் பற்றாக்குறைப் பிரச்சினை பிரதான பேசு பொருளாக இன்னும் இடம் பெறவில்லை. ஆனாலும் இனிவரும் காலங்களில் அரிசிக்கு ஏற்படக் கூடிய பற்றாக்குறை நமது நாட்டின் அரசியலை ஒரு கலக்கு கலக்கினாலும் ஆச்சரியப் படத் தேவையில்லை.

திட்டமிட்ட - செயற்கையான முறையிலான - அரிசித் தட்டுப்பாட்டை உருவாக்கும் அரிசி ஆலை உரிமையாளர்கள் நாட்டரிசி விநியோகத்தை கடந்த 8ஆம் திகதி தொடக்கம் நிறுத்தியுள்ளனர் எனவும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரிசி தொடர்பில் ஏற்பட்டுள்ள நிலையை அவதானத்தில் கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அதில் தலையிட்டு, அதன் மூலம் சில நடவடிக்கைகள் முன்னெடுத்தாராயினும் கள நிலைமையில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

எதிர்வரும் சில வாரங்களில் பண்டிகைக் காலம் ஆரம்பிப்பதால் அரிசிக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

இந்தச் சூழலில் அரிசித் தட்டுப்பாட்டை உருவாக்கி அரிசி விலையை உயர்த்துவதற்கு ஒரு சில தரப்பினர் முயற்சி செய்து வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான பின்னணியில், கீரி சம்பா அரிசி கிலோ ஒன்றின் கட்டுப்பாட்டு விலையை 260 ரூபாவாக அரசு நிர்ணயித்துள்ள நிலையில் ஒரு சில பிரதேசங்களில் 360 ரூபாய்க்கும் அது விற்பனை செய்யப் பட்டுள்ளது. இதனால் விற்பனை வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளதால் ஒரு கிலோ கீரி சம்பா அரிசியை தற்போது 260 ரூபாவுக்கு விற்க அரிசி ஆலை உரிமையாளர்கள் முன்வந்துள்ளனர்.


நாட்டு அரிசிக்கான கேள்வி சந்தையில் அதிகரித்துள்ளதால், அதன் விலையை அதிகரிக்கும் நோக்கில் நாட்டு அரிசிக்கான தட்டுப்பாட்டை உருவாக்கியுள்ளனர் என அரிசி விற்பனையாளர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர். நாளாந்தம் அரிசிக்கான அவசியத்தில் - தேவையில் - சுமார் 70 வீதம் நாட்டு அரிசிக்கு வழங்கப்படுகிறது. அதனால் அதனை வைத்து 'அரிசியியல் சித்து விளையாட்டு' நடத்தத் திட்டமிடுகின்றனர் எனல் கூறப்படுகின்றது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாடானது அரிசி ஆலை உரிமையாளர்களால் திட்டமிட்டு செயற்கையாக உருவாக்கபட்டது என விவசாய சங்கங்கள் குற்றம் சுமத்துகின்றன. இவ்வாண்டின் மார்ச், பெப்ரவரி மாதங்களிலும் மற்றும் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களிலும் கிடைத்த அறுவடை, அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் வரையில் அரிசித் தேவையைப் பூரணப்படுத்த போதுமானதாக இருக்கும் என இந்தச் சங்கங்கள் கூறுகின்றன.

அரிசித் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அதன் மூலம் அரிசிக்கு அதிக கிராக்கியை உருவாக்கி, அந்த வர்த்தகத்தில் அதிக லாபம் ஈட்ட சில கில்லாடி வர்த்தக மாபியாக்கள் திட்டமிட்டு செயலாற்றுகின்றன என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

இந்தச் செயலினால் அரிசி விலை எகிறினாலும், அதனால் நாட்டில் அரிசி உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிக்கு நன்மை கிட்ட போவதில்லை. மாறாக, உற்பத்தியாளருக்கும் பாவனையாளரான பொதுமக்களுக்கும் இடையில் தர்கார்களாக இருக்கும் பெரு வர்த்தகர்களே இதன் மூலம் கொள்ளை லாபம் ஈட்டப் போகின்றார்கள்.

அரிசித் தட்டுப்பாட்டை உருவாக்கி, அரிசி வர்த்தகர்கள் வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வைக்க ஏதேனும் வகையில் நடவடிக்கை மேற்கொண்டால், நெல் விளைச்சலில் ஈடுபட்டுள்ள சுமார் 18 லட்சம் விவசாய குடும்பங்களுக்கு அறுவடையை சரியான ஒரு விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் போய்விடும் அபாயமும் காணப்படுகிறது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# சுன்னாகத்தில் நடந்த பொலிஸ் அராஜகம்; அநுரவின் அரசு பதில் சொல்ல வேண்டும்!

## அங்கஜன் இராமநாதன் தெரிவிப்பு

(சுபேசன்)

கடந்த சனிக்கிழமை சுன்னாகத்தில் இடம்பெற்ற பொலிஸாரின் அராஜக செயற்பாட்டுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசு நிச்சயமாக பதில் சொல்லியே ஆக வேண்டும்.

ஜனநாயக தேசிய கூட்டணியின் முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சுன்னாகப் பொலிஸார் சிறு குழந்தையை தூக்கி வீசி தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளனர்.

ஊழலை ஒழிக்கிறேன் எனக் கூறும்



இந்த அரசு நிச்சயமாக இதற்கு பதில் கூற வேண்டும். ஊழலை இல்லாமல் ஆக்க வேண்டுமானால் அதிகார துஷ்பிரயோகம் இடம்பெறக்கூடாது.

யாழில் நடக்கும் சகல அதிகார அதிகார துஷ்பிரயோகத்துக்கும் ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும். அதனடிப்படையில் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

சுன்னாகத்தில் பொலிஸார் மேற்கொண்ட அராஜகம் தொடர்பில் எடுத்த நடவடிக்கையை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். யாழ். மாவட்ட குடிமகனாக நான் இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன்.

ஊழல் அற்ற அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க நாமும் தயாராக இருக்கிறோம். அதற்கு முன்னர் பொலிஸாரின் அதிகார துஷ்பிரயோக செயற்பாட்டுக்கு நடவடிக்கை எடுங்கள்.– என்றார்.





# உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு திருகோணமலையில் செயலமர்வு

(எஸ்.கீதபொன்கலன்)

நாடாளுமன்றத் தேர்தலின் திருகோணமலை வாக்கெண்ணும் நிலையங்களின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான செயலமர்வு மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நேற்று (11) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் மொழி பேசும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான செயலமர்வு முற்பகல் 10 மணிக்கும், சிங்கள மொழி பேசும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான செயலமர்வு முற்பகல் 11.30 மணிக்கும் இரண்டு கட்டங்களாக நடைபெற்றன.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் வாக்கெண்ணும் நிலையத்தின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், வாக்கெண்ணலுக்கான முன்னேற்பாடுகள், 1981 ஆம் ஆண்டு முதலாம் இலக்க நாடாளுமன்ற தேர்தல்கள் சட்டம், அனைத்து வாக்குப் பெட்டிகளும் கிடைத்ததன் பின்னர் பின்பற்ற வேண்டிய விடயங்கள், இசற் அறிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல், வாக்கெண்ணல் நடவடிக்கையை ஆரம்பித்தல், வாக்கெண்ணலின் மூன்று கட்டங்கள், விருப்பு வாக்கெண்ணும் செயன்முறை, விருப்புக்களை மீளெண்ணல் போன்ற பல விடயங்கள் குறித்து இதன்போது தெளிவூட்டப்பட்டன.

மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆர்.சசீலன் மற்றும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளரும் அஞ்சல் மூல வாக்கு உதவி தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ்.கே.டி நிரஞ்சன் ஆகியோரால் தெளிவூட்டப்பட்டது.

# கால்வாய்கள் சுத்தமின்மையால் சுகாதாரச் சீர்கேட்டுடன் மக்கள்!

(மஸ்கெலியா )

ஹட்டன் நர்சிங் ஹோம் வீதி உள்ள நான்கு கால்வாய்கள் துப்புரவு செய்ப்படாத நிலையில் பற்றைக் காடாக மாறியுள்ளன.

இந்த நிலைமைகள் தொடர்பில் அப்பகுதி மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

ஹட்டன் டிக்கோயா மாநகர சபையின் பணியாளர்கள் கால்வாயை முறையாக சுத்தம் செய்யாததால் இந்த கால்வாய் பற்றை காடாக மாறியுள்ளன.

இதனால் அப்பகுதியில் விஷ ஜந்துங்கள் அதிகரித்து உள்ளன. அதிகளவில் துர் நாற்றம் வீசும் நிலையில் உள்ளது.

உடன் கவனம் செலுத்தி இந்தக் கால்வாய்களைத் துப்பரவு செய்து தர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர் அப் பகுதியில் உள்ள மக்கள்.

இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஒலுவிலில் நிகழ்வு

(எஸ்.அஷ்ரப்கான்)

2024 ஒக்ரோபர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஒலுவில் அல்-ஹம்றா மஹா வித்யாலயத்தின் நூலக கற்றல் வள நிலையத்தால் பல செயற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் அடிப்படையில் இறுதி நாள் நிகழ்வு நேற்று (11) பாட சாலையில் நடைபெற்றது.

அதிபர் அஷ்-ஷெய்க் யு.கே. அப்துர் ரஹீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை நூலக பொறுப் பாசிரியர் ரி.எல்.ஏ.கபீர் வழி நடத்த லில், இணைப்பாடவிதானத்துக்குப் பொறுப்பான பிரதி அதிபர் ஜே.வஹாப்தீனின் வழிகாட்டல் ஆலோசனையுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இங்கு, துறை சார்ந்தவர் களால் கருத்துரை வழங்குதல், ஆசிரியர் மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளால் நூல்கள் அன்பளிப்பு செய்தல், கட்டுரைப் போட்டி நடத்தி சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்குதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.











# யாழ். மாநகர எல்லைப் பகுதிகளில் கழிவுகள் அகற்றப்படாமல் தேக்கம்!

- விதியோரக் குப்பைகளால் அவதியுறும் மக்கள்!
- நுளம்புகள் பெருகும் அவல நிலை!
- வீதிகளில் விபத்துகள் அதிகரிப்பு!
- தொற்று நோய்கள் பரவும் அபாயம்!
- மக்களிடம் விழிப்புணர்வு இல்லை!
- சுகாதாரச் சீர்கேட்டுடன் வீதிகள்!

(யாழ்ப்பாண நிருபர்)

யாழ். மாநகர சபையின் எல்லைப் பகுதிகளில் ஆங்காங்கே குப்பைககள் போடப்பட்டுள்ள நிலையில், அதனை உரிய வகையில் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படாடையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வீதியோரங்களில் போடப்படும் குப்பைகளால் கால்நடைகள் வீதியோரங்களில் கூடுவதால் விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்புகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதனால் தொற்றுநோய்கள் பெருகும் அபாயங்களும் காணப்படுகின்றன. சிறுவர், பெரியோர்களது பம்பஸ்கள், மற்றும் நப்கின்கள், மிருகக் கழிவுகள் போன்றனவும் இவ்வாறு விதியோரங்களில் கொட்டப்படுவதால் அவற்றில் இருந்து தொற்றுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

அத்துடன் பிளாஸ்ரிக் போத்தல்கள், கப்புகள் போன்றனவும் பொறுப்பற்ற விதத்தில் விதியோரங்களில் போடப்படுகின்றன. இவற்றில் தண்ணீர் தேங்கும் பட்சத்தில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கும் நிலையும் ஏற்படுகிறது.

மக்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வதும் இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மக்கள் கழிவுப் பொருள்களைத் தரம் பிரித்து உரிய வகையில் கழிவகற்றும் போது, இவ்வாறு வீதியோரங்களில் கழிவுகள் போடப்படும் நிலையில் மாற்றம் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காக்கைதீவுப் பகுதிகளில் பெருமளவில் கழிவுகள் கொட்டப்பட்டு வரும் நிலையில் இந்த விடயத்தில் யாழ். மாநகரசபை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேட்பார் அற்ற நிலையில் பெரும் அளவில் இந்தப் பகுதியல் குப்பைகள் மற்றும் விலங்குக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

கோழி உரித்த கழிவுகள், ஆடு, மாடுகள் வெட்டிய கழிவுகள் பெரும் அளவில் இந்தப் பகுதியில் கொட்டப்படுகிறது.

இதற்கு ஏன் மாநகரசபை நடவடிக்கை எடுக்வில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொள்களங்களுக்கு அனுமதி கொடுத்து வரிப்பணம் பெறுவோர் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உரியவர்களுக்குத் தெளிவுபடுத்துவது இல்லையா என்றும் இது தொடர்பில் கண்காணிப்பது இல்லையா என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

காக்கைதீவுப் பகுதிகளில் இவ்வாறு கொட்டப்படும் கழிவுகளைக் கால்நடைகள் வீதிகளுக்கு இழுத்து வருவதால் விபத்துகள் ஏற்படும் நிலைமையும் அதிகரித்துள்ளது.

இந்தக் கழிவுகளை உண்ணுவதற்காக இங்கு வரும் கால்நடைகளுடன் மோதுண்டும் விபத்துகள் ஏற்படுகின்றன என்றும் மக்கள் விசம் தெரிவிக்கினிறனர்.

இந்த விடயத்தில் யாழ். மாநகர சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர்.










# சமூக வலைத்தளங்களை தேர்தல் காலங்களில் முறையாக பாவிக்குமாறு கூறும் கபே அமைப்பு!

(பாறுக் ஷிஹான்)

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் நிச்சயமாக அது வன்முறையற்ற தேர்தலாக இருக்க வேண்டும். வன் முறையற்ற தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகளின் அபேட்சகர்களும் ஆதரவாளர்களும் ஒன்றிணைய வேண்டும் என சுதந்திரமானதும் நீதி யானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

கபே அமைப்பின் அமைதியான தேர்தலுக்காக ஒன்றுபடுவோம் எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு கட்சி வேட்பாளர்கள், சுயேட்சைக்குழுக்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்களை தெளிவூட்டும் நிகழ்வும் கபே அமைப்பின் கண்காணிப்பில் ஈடுபட்டுவரும் காண் காணிப்பாளர்களுக்கான விசேட கலந்துரையாடலும் அம்பாறை மாவட்ட மாவட்ட இணைப்பாளர் எஸ்.எல். அப்துல் அஸீஸ் தலைமையில் கல்முனை பகுதியில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது.

அதன் பின்னர் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் இருந்த தேர்தல் நிலவரமும் தற்போது இருக்கின்ற நிலவரத்தினையும் பார்க்கும் போது வன்முறையற்ற தேர்தல் கலாச்சாரம் உருவாகின்றது. அதாவது ஜனநாயகத்தை மதிக்கின்ற வன்முறைகள் அற்ற ஒரு சமாதானமான தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையும் ஒரு கலாசாரம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்கின்றோம்.அதற்கு உதாரணமாக கடந்த ஜனாதிபதித் தேர்தலை குறிப்பிடலாம்.

அதேபோல இந்த பொதுத் தேர்தலிலும் இதுவரை பாரியளவிலான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் எவையும் பதியப்படவில்லை. இதேவேளை பிரச்சார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்கள் பெரும் பங்கினை வழங்குகின்றது. இவற்றை நாம் கண்காணிக்கும் போது அபேட்சகர்களுக்கு எதிரான சேறுபூசக்கூடிய இழிவுபடுத்தக்கூடிய போலிப்பிரச்சாரங்கள் நாளுக்குநாள் அதிகரிப்பதை அவதானிக்க முடிகின்றது.

சட்டவிரோத தேர்தல் பிரச்சாரம் தொடர்பான முறைப்பாடுகளே அதிகளவில் கிடைப்பதை அவதானிக்க முடிகின்றது. இது தவிர கடந்த கால தேர்தலில் காத்தான்குடி பிரதேசத்தில் பாடசாலை சிறுவர்களை தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

கபே அமைப்பு தேர்தல் தொடர்பாக அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்தில் இருந்து 25 மாவட்டங்களில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றது இதுவரை கபே அமைப்புக்கு பல்வேறு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதில் அதிகளவான முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதிகளை மீறுகின்றமை தொடர்பாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் சமூகவலைத்தளங்களைப் பாவித்து வேட்பாளர்களை இழிவுபடுத்தும் பொய்யான பிரச்சாரங்களை வீடியோ பதிவுகள் போலி முகநூல் மற்றும் வட்சாப் ஊடாகவும் இடப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு பாதகத்தை ஏற்படுத்தக் கூடியதை காணக்கூடியதாக உள்ளது.

எனவே அனைத்து அரசியல் கட்சிகளை பிரதிநித்துவப்படுத்தக் கூடியவர்களை வரவழைத்து அமைதியான தேர்தலுக்காக ஒத்துழைப்போம் என்ற வகையில் சத்தியபிரமானம் ஒன்றை பெறுகின்றோம்.

எனவே சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் நிச்சயமாக அது வன்முறையற்ற தேர்தலாக இருக்க வேண்டும். வன்முறையற்ற தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகளின் அபேட்சகர்களும் ஆதரவாளர்களும் ஒன்றிணைய வேண்டும் என கபே அமைப்பு கேட்டுக்கொள்கின்றது .

இருந்தபோதும் அரசியல்கட்சியின் வேட்பாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரிடமும் வேண்டிக்கொள்ளுவது இதுவரை காலப்பகுதியில் பாரிய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாத நிலையில் தேர்தல் பிரச்சார நடவடிக்கையை எவ்வாறு ஈடுபட்டுவந்தீர்களோ அதே போன்று தேர்தல் தினத்திலும் அதனை தொடர்ந்து வரக்கூடிய 7 நாள்களுக்கு பின்னரான காலப் பகுதிக்குள் சமாதானமான தேர்தலுக்காக ஒன்றுபட வேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.– என்றார்.

குறித்த கலந்துரையாடலில் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் உடன் கபே அமைப்பின் சட்டத்துறை பொறுப்பாளர் சட்டத்தரணி ஹரீன்தெர வனகள, மாவட்ட இணைப்பாளர் எஸ்.எல். அப்துல் அஸீஸ் ஆகியோரும் இணைந்திருந்தனர்.



# தமிழர்களின் வாக்குகளைப் பிரித்து ஏனையோர் வெல்வதற்குச் சந்தர்ப்பம்

## ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி வேட்பாளர் றொஜன்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

தமிழர்களின் வாக்குகளை பிரித்து ஏனைய சமுதாயத்தினர் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழர்களுக்கு என்று எந்தக் கட்சியும் ஒன்று பட்டு இருக்க கூடாது என்பதில் தெளிவாக உள்ளனர். எல்லா பக்கத்திலும் பணம் பரிமாறப்படுகின்றது. எனவே மக்கள் சரியான முறையில் வாக்களிக்க வேண்டும் என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர் அ.றொஜன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை (11) மாலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னிலங்கையில் ஏற்பட்ட மாற்றத்தை போன்ற எமது பகுதியிலும் மக்கள் மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளனர். இந்த முறை நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் எதிர்பார்த்த படி இளையோர் சார்பாக நான் போட்டியிடுகின்றேன்.

எனினும் இம்முறை அதிக அளவில் பணம் செலவிடப்படுகிறது. குறித்த




பணம் உரிய வகையில் செலவிடப்படுமாக இருந்தால் ஒரு சில மாதங்களில் வன்னி மாவட்டம் குட்டி சிங்கப்பூராக மாறும். அதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. ஏன் என்று எனக்குத் தெரியவில்லை.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி புதிதாக போட்டியிடுகின்றவர்களும் சரி மக்களிடத்தில் பணத்தை வழங்குவதிலும்,அதனூடாக வாக்குகளை பெற்றுக் கொள்வதில் அக்கறையாக இருக்கிறார்கள்.

கடந்த ஒரு மாதத்தில் மக்கள் மத்தியில் சென்று அவர்களைச் சந்திக்கக் கூடியவர்கள் தேர்தல் முடிவடைந்த பின்னர் குறித்த சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்குவது இல்லை.

தமிழர்களின் வாக்குகளை சிதறடித்து தமிழர்களுக்கு உரிமை இல்லை என்பதைக் காண்பிப்பதற்கு பல கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் வன்னியில் போட்டியிடுகின்றனர்.

சுயேட்சை குழுக்களின் போட்டி போடுகின்றவர்களின் தலைமைத்துவங்கள் அனைத்தும் வெளிநாடுகளில் தொடர்புபட்டதாகவும், வெளிநாடுகளில் இருந்து நிதி அனுப்புபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

தமிழர்களின் வாக்குகளை சிதறடித்து ஏனைய சமுதாயத்தினர் வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமே ஐந்து காட்சிகளை இணைத்து ஒரு கூட்டு அமைப்பாக காணப்படுகின்றது. எனவே தமிழ் மக்கள் இந்தக் கூட்டுக் கட்சியுடன் பயணிக்க வேண்டும்.

தமிழர்களாகிய நாங்கள் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். எதிர் காலத்தில் தமிழர்களுக்காக நாங்கள் பயணிக்க வேண்டுமாக இருந்தால் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பை நீங்கள் ஆதரித்து சிறந்த தீர்வை பெற்றுத் தர வேண்டும்.– என்றார்.

# சோரம் போகாதவர்களை இனம் கண்டு இனத்தின் விழவுக்காக வாக்களியுங்கள்!

## இலங்கை மெதடிஸ்த திருமாவட்ட அவை தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

நடைபெற இருக்கும் நாடாளுமன்னத் தேர்தலில் வாக்களிக்கும் போது மிகவும் சிந்தித்து நிதானித்து மிக பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

தமிழினத்தின் தொடர் கொடும் துன்பியலைத் துடைத்து இனத்தின் விடிவுக்காகவும் நியாயமிக்க அரசியல் தீர்வுக்காகவும் நீதி நிலைநாட்டப்பட, சோரம் போகாதவர்களையும் ஊழல் வன்முறை கொலை கலாச்சார பின்னணியற்றவர்களையும் தெரிவு செய்வதற்கு தங்களது மேலான வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும்.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை வடக்கு, கிழக்கு திருமாவட்ட அவை வாக்காளர்களை இவ்வாறு வேண்டியுள்ளது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை வடக்கு, கிழக்கு திருமாவட்ட அவை வாக்காளர்களை தங்கள் அறிக்கையின் மூலம் வேண்டியிருப்பதாவது,

இலங்கை தேசத்தில் மீண்டுமொரு நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளுகின்றோம். வடக்கு, கிழக்கு வாழ் தமிழர் தேசமாக கடந்த எழுபத்தைந்து வருட வரலாற்றில் எமது மக்களின் வாழ்வியல் பல்வேறுபட்ட அடக்கு முறைகளையும் துன்பங்களையும் துயரங்களையும் மற்றும்உயிர்உடமைஅழிப்புக்களையும் சந்தித்து எதுவித தீர்வுகளையோ பெறாது ஓர் தொடர் கொடும் துன்பியல் வரலாறாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் மீண்டும் ஓர் நாடாளுமன்றத் தேர்தலை தமிழர் தேசம் சந்திக்கின்றது.

பொதுவாகவே தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் தாம் எப்படியும் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக பல போலியான கொள்கைகளையும் வெற்று வாக்குறுதிகளையும் மிக கவர்ச்சிகரமான முறையில் அள்ளி வீசி மிக தந்திரமான முறையில் கபட நாடகமாடுவதும், மதுப்போத்தல்களையும் பணத்தையும் கொடுத்தும் சமய சமூக பிரதேசவாத முரண்நிலைகளைத் தூண்டி வன்முறையையும், பதற்ற நிலையையும் உருவாக்கி வாக்குகளை பெற முயற்சிப்பது ஓர் சமூக பேரவலமாகும்.

இவ்வாறான தீமையும் கொடுங் கோன்மையும் நிறைந்த சூழலில் நீதி, உண்மை, சமாதானம், சமத்துவம் , சகோதரத்துவம், சுதந்திரம் மற்றும் மானிடநேயம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட புதிய கலாசாரத்தை உருவாக்குவதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு இறைவாக்குரைப் பணியாற்றுவதும் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு கிழக்கு திருமாவட்ட அவையாகிய எமது தலையாய பொறுப்பாகும். எனவே இத்தேர்தலில் வாக்களிக்கின் றபோது மிகவும் சிந்தித்து நிதானித்து மிக பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

தமிழினத்தின் தொடர் கொடும் துன்பியலைத் துடைத்து இனத்தின் விடிவுக்காகவும் நியாயமிக்க அரசியல் தீர்வுக்காகவும் நீதி நிலைநாட்டப்பட அர்ப்பணிப்புடனும், பதவிக்காகவோ, பணத்துக்காகவோ சுயலாபத்துக்காகவோ சோரம் போகாதவர்களையும் ஊழல் வன்முறை, கொலை கலாச்சார பின்னணியற்றவர்களையும் தெரிவு செய்வதற்கு தங்களது மேலான வாக்குரிமையினை பயன்படுத்துங்கள்.– என்றுள்ளது.

வடக்கு, கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவர் அருள்பணி அ.சாமுவேல் சுபேந்திரன், வடக்கு, கிழக்கு திருமாவட்ட அவை நீதிக்கும் சமாதானத்துக்குமான பணிக்குழு இணைப்பாளர் அருள்பணி கந்தையா ஜெகதாஸ் ஆகியோர் கையொப்பமிட்டுக் கூட்டாக இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.



# ட்ரோன் தொழில்நுட்பம் நெற்செய்கையில் வெற்றி

## விவசாய நிலையங்களுக்கு ட்ரோன்கள்

நெற் செய்கை மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் விவசாய சேவை நிலையங்களுக்கு தலா ஒரு ட்ரோன் வீதம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை விவசாய துறை ஆரம்பித்துள்ளது. இதன் முதற்கட்டமாக அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை, குருநாகல், பொலன்னறுவை, வவுனியா மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளுக்கு 100 ட்ரோன்கள் வழங்கப்பட்டுள்ளன.

அம்பாறை அக்கரைப்பற்று கிழக்கு கமநல சேவை நிலையத்தின் தலைமை அதிகாரி யூ.எல்.சம்சுடீன் வழிப்படுத்தலில் களை நாசினி விசிறும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றது. மக்கள் தம்மை தொடர்புகொண்டு இதனை பெற்று பயனடையுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும், சுமார் 70 லட்சம் ரூபா மதிப்பிலான ட்ரோன்களைப் பயன்படுத்தி, பூச்சி மருந்து தெளித்தல், உரம் தெளித்தல், நெல் விதைத்தல், வயல்களை அளத்தல், நோய்களை கண்டறிதல், போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் விவசாயிகளுக்கு இது பயனுள்ளதாக இருக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சராசரியாக ஒரு ஏக்கருக்கு எண்ணெய் தெளிப்பதற்கு சுமார் 15 நிமிடங்கள் ஆகும். எண்ணெய் பயன்பாட்டின் செயற்திறனை சுமார் 50 வீதம் (சீரான தன்மை அதிக துள்ளியம் மற்றும் குறைவான விரயம்) என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இரண்டாவது கட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் 563 விவசாய சேவை நிலையங்களுக்கும் ட்ரோன்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சு தெரிவித்துள்ளது.





# களுவாஞ்சிக்குடியில் குருதிக்கொடை நிகழ்வு

(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த இரத்ததான நிகழ்வு இந்த வருடம் 7 ஆவது தடவையாகப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியுடன் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வானது நேற்று திங்கட்கிழமை பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்றது.

விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் கழகங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், பாதுகாப்பு படையினர், பொது மக்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என இருநூறுக்கும் அதிகமானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர் .





# 528 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்புக்கு ஏற்பாடுகள பூர்த்தி!

## அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம

(வி.ரி.சகாதேவராஜா)

வியாழக்கிழமை (14) நடைபெறவிருக்கின்ற இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் 528 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம இன்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலில் 528 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் 26 ஆயிரம் ஆக இருந்த தபால் மூல வாக்குகள் இம்முறை முப்பதாயிரம் ஆக அதிகரித்துள்ளன.

அதேபோன்று அம்பாறை ஹார்டி உயர் தொழில்நுட்ப கல்லூரியில் வாக்கெண்ணும் நிலையங்கள் கடந்த ஜனாதிபதி தேர்தலில் 56 ஆக இருந்தது. ஆனால் நாடாளுமன்ற தேர்தலில் அது 68 ஆக அதிகரிக்கப்பட்டு இருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 21 அரசியல் கட்சிகளதும் 43 சுயேட்சை குழுக்களதும் நியமனப் பத்திரங்கள் ஏற்றுகொள்ளப்பட்டன.



அம்பாறை மாவட்டத்தில் 2024 நாடாளுமன்ற தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் 555432 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் 2024 ஆண்டுக்கான பொதுத் தேர்தல் தேர்தல் ஆணைக்குழுவால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 2024.10.04 தொடக்கம் 2024.10.11 வரையான காலப் பகுதியில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 07 ஆசன தெரிவுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 22 உம் சுயேட்சைக்குழுக்கள் 50 இனதும் நியமனப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன.

அத்துடன் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்த அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியும் 07 சுயேட்சைக் குழுக்களையும் தேர்தல் சட்ட திட்டங்களுக்கமைய பல்வேறு குறைபாடுகளை கருத்திற் கொண்டுநிராகரித்துள்ளோமா.இதன்படி தற்போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 21 உம் சுயேட்சைக் குழுக்கள் 43 இனது நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொண்டுள்ளோம்.

மொத்தமாக 64 அரசியல் கட்சி உட்பட சுயேட்சைக்குழுக்கள் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காகப் போட்டியிடுகின்றன.

2024 ஆண்டு பொதுத்தேர்தல் அறிவித்த பின்னர் அம்பாறை மாவட்டத்தில் வன்முறையற்றறும் அமைதியானதுமான தேர்தல் செயற்பாடுகள் நடைபெற்று கொண்டு வருகின்றது.பெரியளவிலான வன்முறைகள் எவையும் இடம்பெறவில்லை.எனினும் சிறு சம்பவங்கள் தேர்தல் கண்காணிப்பு ஊடாக கிடைக்கப்பெற்றிருந்தன.

அவற்றுக்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. வன்முறையற்ற நீதியான தேர்தல் ஒன்றை நடத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவும் தெரிவத்தாட்சி அலுவலருமான நானும் பொதுமக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.- என்றார்.



# சேவைநலன் பாராட்டு விழா!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை பொது நூலகத்தில் 30 ஆண்டுகள் நூலக உதவியாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்கின்ற திருமதி தங்கேஸ்வரி சுகிர்தனுக்கு நூலக ஊழியர்கள் ஒழுங்கு செய்திருந்த சேவை நலன் பாராட்டு விழா இன்று செவ்வாய்கிழமை (12) நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நற்பிட்டிமுனை நூலகர் எஸ்.எம்.ஆர். அமினுதீன் உட்பட கல்முனை மாநகர சபையின் கீழ் இயங்கும் கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் நற்பட்டிமுனை பொது நூலகங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது திருமதி ரி. சுகிர்தனின் 30 வருட கால உன்னத சேவைகள் பற்றி புகழாரம் சூட்டி பாராட்டுரைகள் இடம்பெற்றன. நினைவுச் சின்னங்கள் மற்றும் பரிசுப் பொருள்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.





# மாபெரும் வெற்றிக்கு ஆதரவு வழங்குக! வேட்பாளர் மருதபாண்டி ராமேஸ்வரன்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் இருந்து இம்முறை ஆறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தக்குத் தெரிவாக வேண்டும். எனவே, காங்கிரஸ் வேட்பாளர்கள் மற்றும் திகாம்பரம் தரப்பையே எமது மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

அவரது சொந்த மண்ணான வட்டகொடை நகரில் நேற்று (11) மாலை நடைபெற்ற கடைசி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நுவரெலியா மாவட்டம் உட்பட ஒட்டுமொத்த மலையகத்துக்கும் பல சேவைகளை செய்துள்ளது. எனவே, ஜனாதிபதி தேர்தல்போல் அல்லாது பொதுத் தேர்தலில் தமிழ்ப் பிரிதிநித்துவம் குறித்து சிந்தித்து மக்கள் வாக்களிக்க வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், அதிகரித்துக் கொள்வதற்காகவும் மலையகத்திலுள்ள இரு பிரதான கட்சிகளும் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றன. என்னையும், திகாம்பரத்தையும் வீட்டுக்கு அனுப்புவார்களாம். நாம் இருவரும் நிச்சயம் நாடாளுமன்றம் செல்வோம்.

நுவரெலியா மாவட்டத்தில் இன, மத, மொழி பேதமின்றி அனைத்து இன மக்களுக்காகவும் நாம் சேவைகளை செய்துள்ளோம். கோவில், பள்ளி, விகாரை என அனைத்து ஆன்மீக நிலையங்களுக்கும் உதவிகளை வழங்கியுள்ளோம். நானும், எமது பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானும் உரிய சேவைகளை வழங்கியுள்ளோம்.

எனவே, யானை சின்னத்தில் இ.தொ.கா. வேட்பாளர்களாக களமிறங்கியுள்ள என்னையும், எமது பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானையும், தேசிய அமைப்பாளர் சக்தி வேலையும் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வையுங்கள்.

நமக்கான தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் அவசியம் என்பதால் தான் மலையகத்திலுள்ள இரு கட்சிகளும் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றன. எமது பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் சிறந்த இளம் தலைவர். எனது அரசியல் ஆசான் ஆறுமுகன் தொண்டமான்.

காங்கிரஸ் ஊடாகவே பல சேவைகளை மக்களுக்கு முன்னெடுக்க முடிந்தது.சிலருக்கு காங்கிரஸை விமர்சித்தால் மட்டுமே அரசியல் செய்ய முடியும். கடந்த தேர்தலில் ஐந்து தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைத்தது. இம்முறை ஆறு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை வென்றெடுக்க முடியும்.

இலங்கைத் தொழிலாளர் காங்காரஸ் வேட்பாளருக்கு வாக்களியுங்கள் இல்லையேல் முற்போக்கு கூட்டணியினருக்கு வாக்களியுங்கள். சுயேட்சைக் குழுக்களுக்கு வாக்களிப்பதால் எந்த பயனும் இல்லை. காங்கிரஸையும், தொண்டமான் நாமத்தையும் எந்த சக்தியாலும் அழிக்க முடியாது.- என்றார்.





# உதவி தெரிவத்தாட்சி அலுவலருக்கு மன்னாரில் நடந்த கலந்துரையாடல்

(வாஸ் கூஞ்ஞ)

எதிர்வரும் நாடாளுமன்ற 2024 பொதுத் தேர்தல் தொடர்பான முன்னாய்த்த ஏற்பாடுகள் தற்போது நாடாளவியரீதியில் நடைபெற்று வருகின்ற சூழலில் மன்னார் மாவட்டத்திலும் இதற்கான ஏற்பாடுகள் மிக நேர்த்தியாக நடைபெற்று வருகின்றன.

நேற்று திங்கள்கிழமை (11) மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் வி. சிவராஜாவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலகருமான க.கனகேஸ்வரன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் மன்னார் மாவட்ட செயலகத்தில் வாக்கெண்ணும் நிலையங்களில் கடமையாற்றவுள்ள உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணுவதன் தொடர்பான கலந்துரையாடப்பட்டது,

வாக்களிக்கப்பட்ட இந்த வாக்குகள் மூன்று கட்டமாக எண்ணப்படும். எனவும் அதாவது முதலில் ஒவ்வொரு பெட்டிகளிலும் உள்ள வாக்குகள் சரி பார்க்கப்படும் எனவும் அடுத்து ஒவ்வொரு கட்சிகளுக்கும் உள்ள வாக்குகள் எண்ணப்படும் இதைத் தொடர்ந்து ஒவ்வொரு வாக்காளர்களுக்குமுள்ள வாக்குகள் எண்ணப்படும் பின் இவற்றின் விவரங்கள் யாவும் வவுனியா மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் வாக்குகள் எண்ணும் கடமையில் ஈடுபட இருக்கும் சுமார் ஐம்பது பேர் பங்குபற்றியிருந்தனர்.



# பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்திய 11 தீவிரவாதிகள் மணிப்பூரில் சுட்டுக் கொலை

மணிப்பூரின் ஜிரிபாம் பகுதி பொலிஸ் நிலையத்தை குறிவைத்து குகி பழங்குடியின தீவிரவாதிகள் நேற்று திடீர் தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடிகொடுக்கும் விதமாக பாதுகாப்பு படை வீரர்கள் நடத்திய என்கவுன்டரில் 11 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப் பட்டனர். இந்த மோதலில் சி.ஆர்.பி.எஃப். வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம் மைத்தேயி சமூகத்தினருக்கும், குகி பழங்குடியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதன்காரணமாக மாநிலம் முழுவதும் கலவரம் வெடித்து இதுவரை 237 பேர் உயிரிழந்துள்ளனர். 1,500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த சூழலில், பாதுகாப்பு படையினர், பொதுமக்களை குறிவைத்து குகி பழங்குடியினத்தை சேர்ந்த சில தீவிரவாத குழுக்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

கடந்த 8 ஆம் திகதி ஜிரிபாம் பகுதியில் 6 வீடுகளை தீவிரவாதிகள் தீ வைத்து கொளுத்தினர். கடந்த 9 ஆம் திகதி ப்பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த இளம்பெண்ணை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

இதன் தொடர்ச்சியாக, மணிப்பூரின் ஜிரிபாம் பகுதி பொலிஸ் நிலையத்தை குறிவைத்து குகி பழங்குடியின தீவிரவாதிகள் நேற்று திடீர் தாக்குதல் நடத்தினர். சுதாரித்துக் கொண்ட பொலிஸார், அவர்களுக்கு பதிலடி கொடுத்தனர். சம்பவ இடத்துக்கு சி.ஆர்.பி.எப். வீரர்களும் விரைந்து வந்தனர்.

பாதுகாப்பு படை வீரர்கள் நடத்திய தாக்குதலில் 11 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த மோதலில் சி.ஆர்.பி.எப். வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

இதுகுறித்து பொலிஸார் தெரிவிக்கையில்,

“ஜிரிபாம் பொலிஸ் நிலையத்துக்கு அருகே அகதிகள் முகாம் உள்ளது. காவல் நிலையம்மற்றும் அகதிகள் முகாமை குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அவர்களது தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

கடந்த சில வாரங்களாக தீவிரவாதிகளை வேட்டையாடும் பணி தீவிரப் படுத்தப்பட்டு உள்ளது. கடந்த 3 நாள்களில் ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.’ என்றனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஜிரிபாம் மாவட்டம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது.

# இந்திய கடற்படையில் இணையும் இரண்டு புதிய போர்க் கப்பல்கள்

ரஷ்யாவில் 8,000 கோடி செலவில் செலவில் தயாரிக்கப்பட்ட 2 போர்க்கப்பல்கள் விரைவில் இந்திய கடற்படையில் இணைக்கப்பட உள்ளன.

இந்திய கடற்படைக்காக ரஷ்யாவில் 4 போர்க்கப்பல்களை தயாரிக்க கடந்த 2016 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. ரஷ்யாவின் கலினின்கிராட்டில் உள்ள யந்தர் கப்பல் கட்டும் தளத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டில் போர்க்கப்பல்களை தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டது. கடந்த 2022 ஆம் ஆண்டில் போர்க்கப்பல்கள் இந்தியாவிடம் ரஷ்யா ஒப்படைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், கொரோனா தொற்று மற்றும் ரஷ்யா- உக்ரைன் போர் காரணமாக போர்க்கப்பல்களை தயாரிக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டது. இந்த சூழலில் 2 போர்க்கப்பல்களை மட்டும் ரஷ்யாவில் தயாரிக்கவும் மீதமுள்ள 2 போர்க் கப்பல்களை இந்தியாவின் கோவாவில் தயாரிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இதன்படி ரஷ்யாவில் 2 போர்க்கப்பல்கள் தயாரிக்கப்பட்டு



வெள்ளோட்டம் நிறைவு செய்யப்பட்டு உள்ளது. எதிர்வரும் டிசம்பரில் முதல் போர்க்கப்பல் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட உள்ளது. இதற்காக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் டிசம்பரில் ரஷ்யாவுக்கு சென்று புதிய போர்க்கப்பலை இந்திய கடற்படையில் இணைக்க உள்ளார். இதற்கு ஐ.என்.எஸ். துஷில் என்று பெயரிடப்பட்டு உள்ளது. சம்ஸ்கிருதத்தில் துஷில் என்றால் பாதுகாவலன் என்று அர்த்தம்.







# பாலஸ்தீன மக்களை சித்திரவதை செய்த ஹமாஸ்; காணொலி வெளியிட்டது இஸ்ரேல் இராணுவம்!



பாலஸ்தீன மக்களை ஹமாஸ் தீவிரவாதக் குழுவினர் சங்கிலியால் கட்டிவைத்து சித்ரவதை செய்யும் காணொலியை இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டுள்ளது. பாலஸ்தீன மக்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு அவர்கள் அடித்து துன்புறுத்தப்படுவது காணொளியில் பதிவாகியுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் சுமார் 1,200 பேரை படுகொலை செய்து, 200 இற்கும் மேற்பட்டவர்களை பிணைக் கைதிகளாக ஹமாஸ் தீவிரவாத அமைப்பினர் பிடித்துச் சென்றனர். இதையடுத்து ஹமாஸ் அமைப்பினரை முற்றிலுமாக ஒழித்துக் கட்டுவதாக சூளுரைத்த இஸ்ரேல், அவர்கள் தங்கியிருக்கும் காசாவில் தீவிர தாக்குதலை நடத்திவருகிறது. இதில், இதுவரை 43,500 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 70 சதவீதத்தினர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பாலஸ்தீன மக்களை பிடித்து வைத்து ஹமாஸ் அமைப்பினர் சித்ரவதை செய்யும் காணொளியை இஸ்ரேல் இராணுவத்தினர் வெளியிட்டுள்ளனர். அதில் அவர்களை சங்கிலியால் கட்டி வைத்து அடித்துத் துன்புறுத்தும் காட்சிகள் பதிவாகியுள்ளன.

இந்த காணொளி 2018 முதல் 2020 ஆம் ஆண்டுக்குள் வடக்கு காசா பகுதியில் எடுக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. கண்காணிப்புக் கருவியில் பதிவான காணொளி காட்சிகள் இவை என்று தெரிவதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான தகவலை நியூயார்க் போஸ்ட் இதழ் வெளியிட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் முன்பு தங்கியிருந்த ஜபாலியா என்ற பகுதியில் உள்ள முகாமில் வைக்கப்பட்டு இருந்த கண்காணிப்பு கருவியிலிருந்து இது எடுக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளை மீறி பிடித்து வைத்த பொதுமக்களை ஹமாஸ் அமைப்பினர் சித்ரவதை செய்யும், அவர்கள் மிருகத்தனமாக நடந்துகொள்ளுதல் போன்றவை காணொளியில் பதிவாகியுள்ளது என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.







# இரு முக்கிய நியமனங்களை வழங்கினார் டொனால்ட் ட்ரம்ப்

டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவான நிலையில், ஜனவரி மாதம் வெள்ளை மாளிகை சென்று தமது பொறுப்புக்களைக் கையேற்பதற்கு முன்னர் மேலும் இரு முக்கிய நியமனங்களை செய்துள்ளார்.

குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கப் பிரிவில் பணிப்பாளராக பணியாற்றிய ரொம் ஹோமனை உயர்மட்ட எல்லை பாதுகாப்பு செயல் பணிப்பாளராக நியமித்துள்ளார்.

இது தவிர நியூயோர்க் கொங்கிரசின் எல்சி ஸ்ரீபனிக் எனும் பெண்மணியை ஐக்கிய நாடுகளிற்கான அமெரிக்கத் தூதராக நியமித்துள்ளதாக 'நியூயோர்க் போஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில் டொனால்ட் ட்ரம்பின் குடியரசுக் கட்சி அமெரிக்க காங்கிரசின் முழு கட்டுப்பாட்டை நோக்கி நெருங்கிச் செல்கின்றது. ஏற்கனவே செனேட்டின் பெரும்பான் மையை சுவீகரித்துள்ள நிலையில் ஒரு சில இடங்களை மட்டுமே வெல்ல வேண்டிய நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 02

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 12/11/2024

## கனடாவில் இடம்பெற்ற கோர விபத்து; மூவர் பலி

கனடாவில் இம்பெற்ற கோர விபத்துச் சம்பவமொன்றில் மூன்றுபேர்கொல்லப்பட்டுள்ளனர்.

கனடாவின் கிழக்கு ஒன்றாரியோ பெலிவில் பகுதியில் இந்த விபத்துச் சம்பவம் 02▶



# அனைத்து கனடா இந்துக்களும் மோடியை ஆதரிக்கவில்லை

## ட்ரூடோவின் கருத்தால் கோபத்தில் மோடி அரசு

**அனைத்து கனடா இந்துக்களும் மோடியை ஆதரிக்கவில்லை என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளமை மோடி அரசுக்கு சினத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது.**

**இந்தியா - கனடா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. கன டாவில் வசித்த காலிஸ்தான் பிரிவினை வாத தலைவர் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர்ஜஸ்டின்ட்ரூடோதெரிவித்ததையடுத்து மோதல் போக்கு ஏற்பட்டது.**

சமீபத்தில் இந்திய தூதரக அதிகாரிகளிடம் விசாரணை நடத்துவோம் என்று கனடா அரசாங்கம் தெரிவித்ததால் இரு நாட்டு உறவிலும் விரிசல் அதிகரித்தது.

இந்த நிலையில் ஒட்டாவாவில் இந்திய வம்சாவளியினர் நிகழ்ச்சியில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கலந்து கொண்டு உரையாற்றியபோது,

“கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் பலர் உள்ளனர், ஆனால் அவர்கள் ஒட்டுமொத்த சீக்கிய சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. அதேபோல் கனடாவில் மோடி அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் உள்ளனர்,

ஆனால் அவர்கள் ஒட்டுமொத்த இந்து கனேடியர்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.”- என்றார்.

இதன் மூலம் கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் உள்ளனர் என்பதை ட்ரூடோ ஒப்புக்கொண்டுள்ளார்.

அதேவேளை, தனது கருத்து மூலம் இந்தியாவை மீண்டும் சீண்டி உள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் கூறியுள்ளன.

# கனடாவில் தமிழ்த் திரைப்பட திரையரங்கு மீது துப்பாக்கிச் சூடு

கனடாவில் தமிழ் திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படும் திரையரங்கு ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.


மேற்படி திரையரங்கில் ஹிந்தி மற்றும் தமிழ் உள்ளிட்ட இந்திய திரைப்படங்கள் அதிக அளவில் காட்சிப்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோவின் வுட்சயிட் திரையரங்கில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மைய நாட்களாக இவ்வாறான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





# கனடா யுகுன் பகுதியில் நிலநடுக்கம் பதிவானது

கனடாவின் யுகுன் பகுதியில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

ஐந்து தசம் மூன்று ரிச்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதராகியுள்ளதாக கனடிய இயற்கை வள நிறுவனம் அறிவித்துள்ளது.

எனினும் இந்த நில நடுக்கம் காரணமாக எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

யுகுனின் கெனோன் பகுதியில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

முன்னதாக நிலநடுக்கத்தின் அளவு 5.8 ரிச்டர் என அறிவிக்கப்பட்ட போதிலும் பின்னர் 5.3 ரிச்டர் என திருத்தம் செய்யப்பட்டது.

சில இடங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பகுதியில் இதற்கு முன்னர் இவ்வாறு நிலநடுக்கங்கள் எதுவும் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சில இடங்களில் நிலநடுக்கம் உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பகுதியில் இதற்கு முன்னர் இவ்வாறு நில நடுக்கங்கள் எதுவும் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் 2 பெண்கள் கடத்தல்; சந்தேகநபருக்கு எதிராக வழக்கு



கனடாவின் ரொறன்ரோ பெரும்பாக பகுதியின் வைத்து இரண்டு பெண்களை கடத்திய நபர் ஒருவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

இந்த நபர் மேலும் பெண்களை கடத்தி இருக்கலாம் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

37 வயதான மார்க்கஸ் மோசஸ் என்ற நபரை இவ்வாறு சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பீல் மற்றும் ஹால்டன்பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்த இரண்டு பெண்களும் ஒருவரை ஒருவர் தெரியாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி பெண்களை பாலியல் தொழில் ஈடுபடுத்தி சந்தேக நபர் பணம் ஈட்டி உள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபருக்கு எதிராக 26 குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்தில் மேலும் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ட்ரக்டர் டெய்லர் வண்டியொன்றுடன் மினி வான் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 25 வயதான ஆண், 22 வயதான பெண் மற்றும் 8 மாதங்களான குழந்தையொன்றும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

